**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 58/2022**

**09.06.2026.**

**DW- 2**

**பி.வா.சா.2. பூமிநாதன், த/பெ.நாகையன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எனது ஊராட்சி ஏற்கனவே ஊராட்சி மன்ற தலைவராக இருந்தேன் என்றால் - சரிதான். பிரதிவாதி கண்ணன் எனது ஊரைச் சேர்ந்தவர் என்றால் - சரிதான். நானும் பிரதிவாதியும் ஒரே கட்சியை சார்ந்தவர்கள் என்றால் -இல்லை. இந்த வழக்கு சம்மந்தமான அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் - சரிதான். பிரதிவாதி எந்த வருடம் Record Clerk பணியிலிருந்து ஓய்வு பெற்றார் என்றால் - தெரியாது. எந்த தேதியில் ரூ.14 இலட்சத்தை வாங்கினார் என்றால் - எனக்கு தெரியாது. அவர் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் அதனை தொடர்ந்த போராட்டங்கள் சம்மந்தமாக எனக்கு தெரியுமா என்றால் - தெரியும். கண்ணன் எந்த வங்கியில் அவரது தொகையை டெபாசிட் செய்தார் என்றால் - கூத்தாநல்லூர் மத்திய கூட்டுறவு வங்கியில் செய்தார். அந்த வங்கியின் செயலாளர் ஜானகிராமன் கிடையாது என்றாலும் வேறு நபர் என்றாலும் - சரிதான். ஜானகிராமன் என்பவர் விக்கிரபாண்டியம் தொடக்க வேளாண்மை வங்கியின் செயலாளர் என்றால் - சரிதான். விக்கிரபாண்டியத்திற்கும் கூத்தாநல்லூருக்கும் இடையே எத்தனை கிலோ மீட்டர் இருக்கும் என்றால் - 4 கி.மீ இருக்கும். எங்கள் ஊரிலிருந்து கூத்தாநல்லூர் பக்கமா அல்லது விக்கிரபாண்டியம் பக்கமா என்றால் -விக்கிரபாண்டியம் தான் பக்கம். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் மத்திய வேளாண்மை கூட்டுறவு வங்கி என்பது வெவ்வேறு என்றால் - சரிதான். மத்திய கூட்டுறவு வேளாண்மை வங்கியில் டெபாசிட் செய்யும்போது எந்த இடத்திலாவது ஜானகிராமன் கையெழுத்து செய்ததாக உள்ளதா என்றால் - இல்லை. எங்கள் தரப்பு குற்றச்சாட்டு என்பது ஜானகிராமனே மத்திய கூட்டுளவு வங்கியில் பிரதிவாதியின் கையெழுத்தை போட்டு தொகையை எடுத்துவிட்டார் என்பதுதான் என்றால் - சரிதான். எல்லா வங்கி மேலதிகாரிகளுக்கும் புகார் கொடுக்கப்பட்டு அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் - எடுத்தார்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் - விசாரணை நடந்துவருகிறது. அதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் - இல்லை. அவ்வாறு எந்தவிதமான விசாரணையும் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் - சரியல்ல. தொாகை எந்த தேதியில் போர்செரியாக கையெழுத்து போட்டு எடுக்கப்பட்டது என்றால் - என்னால் சொல்ல முடியாது. போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் பிரதிவாதிக்கு தெரிந்தே அவரது அனுமதியின் பேரில் தான் நடைப்பெற்றது என்றால் - சரிதான். பிரதிவாதி இருந்துதான் செயல்பட்டார். வாதி தவறு செய்துவிட்டார் என்று ஊர் பொதுமக்கள் மத்தியில் பிரதிவாதி தான் அறிவிப்பு கொடுத்தார் என்றால் - சரிதான். வாதி பணிப்புரியும் அலுவலகத்திற்கு நோட்டீஸ் அனுப்பினார் என்றால் - சரிதான். முதல் தகவல் அறிக்கை தவறான தகவலின் அடிப்படையில் போடப்பட்டது என்று அது முடிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் - தெரியாது. வாதி எந்த தவறும் செய்யாமல் பொய்யான குற்றச்சாட்டின்

பேரில் பொதுமக்கள் மத்தியிலும் அவரது உறவினர்கள் மத்தியிலும் பிரதிவாதியால் அவதூறு பரப்பப்பட்டது தவறானது என்றால் - சரியல்ல. பிரதிவாதி வாதி கையாடல் செய்ததாக பொதுமக்கள் மற்றும் உறவினர்கள் மத்தியில் சொன்னது தெரியுமா என்றால் - தெரியும். நடைப்பெறாத சம்பவத்தை குறித்து வாதியின் மீது அவதூறு பரப்பியுள்ள நிலையில் அந்த உண்மை விவரங்களை தெரிந்துக்கொண்டு பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.